Faculty of Management & Commerce
South Eastern University of Sri Lanka

# Proceedings of the Second Annual Research Conference - 2013

On

"The Emergence of Novelty in Business Management"

PUBLISHED BY
FACULTY OF MANAGEMENT & COMMERCE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
UNIVERSITY PARK
OLUVIL 32360
SRI LANKA

**Faculty of Management & Commerce (FMC)**
**South Eastern University of Sri Lanka (SEUSL)**
**University Park**
**Oluvil, 32360**

**Phone** : - +94-67-2255069
**Fax** : - +94-67-2255069

www.seu.ac.lk/fmc

**ISSN: - 2279-1280**

**Copyright:-**

**© Faculty of Management & Commerce, South Eastern University of Sri Lanka**

**Disclaimer:-**

*All rights reserved. No part of this proceedings may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the authors, except for the inclusion of brief quotations in a review. The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the FMC, SEUSL. The views expressed remind the responsibility of the named authors and do not necessarily reflect those of the FMC, SEUSL.*

**Editor in Chief:-**
Mrs. MAC. Sulaiha Beevi

**Associate Editor:-**
Mr. ALMA. Shameem

**Editorial Board:-**
Dr. MIM. Hilal
Dr. A. Jahfer
Ms. Hansiya Rauf
Mr. KM.Mubarak
Mr. MM. Shiraj

**Vijitha Ravishankar**

# Roll of Microfinance in the poverty alleviation in Jaffna Peninsula

**Department of Economics, University of Jaffna (email: rviji2007@yahoo.com)**

**ஆய்வுத்தலைப்பு**

யாழ்குடா நாட்டின் வறுமை தணிப்பில் நுண்நிதியின் பங்கு

**ஆய்வுச்சுருக்கம்**


வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளில் வறுமையைக் குறைப்பதற்கான முக்கியமான ஒரு கருவியாக நுண்நிதி கருதப்படுகின்றது. அந்தவகையில் வறுமைத் தணிப்பில் நுண்நிதி எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதனைக் கண்டறிவதே இவ்ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. யாழ்மாவட்டத்தில் நுண்நிதி வழங்கலில் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச்சங்கங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. எனவே இவ்வாய்வு யாழ்மாவட்டத்தில் வறுமைத்தணிப்பில் நுண்நிதியின் பங்குபற்றி, விசேடமாக சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் நுண்நிதி வழங்கலும் அதனூடான வறுமைத் தணிப்பும் ஆய்வுசெய்யப்படுகின்றது.

ஆய்வுப்பிரதேசத்தில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாகக் கடன்பெறும் 100 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு வினாக்கொத்துகள் வழங்கப்பட்டு அதன்மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலும், இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையிலும், இவ்வாய்வு விபரணரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள், தகவல்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தி ஆய்வின் நோக்கம் உள்ளடக்கம் என்பவற்றுக்கு பொருத்தமான அட்டவணைகள், வரைபடங்கள் என்பவற்றினூடாக விளக்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நிறுவனங்கள் நுண்நிதி வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கவேண்டும். தொழிலுக்கான காப்புறுதி, சேமிப்புத்தொடர்பான விளக்கங்களை வழங்குதல் போன்றவற்றையும் வழங்குவதன் மூலம் நுண்நிதியினை வறுமைத்தணிப்பிற்கான முக்கியமான ஒருகருவியாக மாற்றமுடியும் என்பதாகும்.


திறவுச்சொற்கள் : நுண்நிதி, வறுமைத்தணிப்பு, சிறுதொழில் முயற்சி,

**ஆய்வின் அறிமுகம்**

நுண்நிதி தொடர்பான ஆர்வம் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அதிகரித்து அது வறுமைக் கெதிரான வியூகமாக முக்கியமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அவற்றின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படும் ஒரு காரணியாக விளங்குகின்றது. 1990களின் தசாப்தம் ஆசிரியாவின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் தாராளமயமாக்கல் தசாப்தமாகும், தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் நடவடிக்கைகள் அபிவிருத்திக்கு வழிகாட்டியாக அமைந்தது. வெளிநாட்டு முதலீடு விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பம், திறந்த சந்தை நடவடிக்கைகள் கல்விகற்றோரையும்,

தகுதியானவர்களையும் தங்களுக்கான தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கு வழிகாட்டியது. சமூகத்தில் வறியவர்களுக்கும், செல்வந்தர் களுக்குமிடையில் இடைவெளி உண்டாகி புதிய பரிமாணத்தைத் தழுவியது. குறைந்த கல்வியறிவுள்ள தொழில் திறமையுள்ளவர்கள் இழப்பை அனுபவித்தார்கள்.

இந்நிலையில் கொள்கை வகுப்போர் வறுமைக்கெதிரான மாற்று வழிகளைத்தேடுகின்ற இந்நேரத்தில் மாற்றுவழிகளில் ஒன்றாக “நுண்நிதி” மிகவும் பலத்துடன் தோன்றியுள்ளது. நுண்நிதி என்பது வறியவர்களுக்கும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் நிதிச் சேவைகளை வழங்குவதைக் குறிக்கின்றது. வர்த்தக வங்கிகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பற்ற வர்களாகவும், வங்கி நடைமுறைகளை நன்கு அறிந்திராத மக்களுக்கான கடன்கள் வைப்புக்கள், கொடுப்பனவுச் சேவைகள், பணமாற்றல்கள், காப்புறுதிச் சேவைகள் என்பவற்றை இந்நிதிச் சேவைகள் உள்ளடக்கியுள்ளன.

இன்று அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் வறியவர்களுக்கும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் நுண்நிதிச் சேவைகளை வழங்கும் மூலங்களாக முறைசார்ந்த, முறைசாரா அரைகுறை முறைசார் நிறுவனங்கள் உள்ளன.

இந்தவகையில் நுண்நிதி வழங்கலானது வங்காளதேசத்தின் கிரமீன் வங்கியால் ஆரம்பிக்கப்பட்டு ஆசிய பிராந்தியத்தில் அதிகளவில் அபிவிருத்தியடைந்துள்ளது. இலங்கையும் ஆசிரியப் பிராந்தியத்தில் அமைந்திருப்பதால் இங்கும் நுண் நிதிவழங்கல் வளர்ச்சி கண்டு வருகின்றது. குறிப்பாக இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் நிதிப்படுத்தல் துரித வேகம் கண்டுவரும் இவ்வேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வறுமைக்கெதிரானதும், வேலைவாய்ப்பு உருவாக்கலுக்குமான ஒரு உபாயமாக நுண்நிதி வளர்ச்சி கண்டுவருகின்றது.

அந்தவகையில் இலங்கையைப் பொறுத்து வறுமை தணிப்பால் நுண்நிதியின் பங்குபற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் யாழ் குடாநாட்டில் வறுமைதணிப்பில் நுண்நிதியின் பங்கு பற்றி ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தினால் முழுமையாக அழிவடைந்த நிலையில் உள்ள குடாநாட்டுமக்கள் வீடுகளை இழந்து, நிலங்களை இழந்து, குடும்பத்தலைவர்களை இழந்து, தொழில்களை இழந்து வறுமை நிலையில் நிற்கும் இவ்வேளையில் இவர்களுக்கான வாழ்வாதாரத்தைத் தேடும் ஒரு வழிமுறையாக நுண்நிதி காணப்படுகின்றது. எனவே குடாநாட்டுமக்களின் வறுமையைத் தணிப்பதில் சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் நுண்நிதியின் பங்களிப்புப் பற்றி சிறப்பாக நோக்குகின்ற வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்**

இவ்வாய்வின் பிரதான நோக்கம் ‘யாழ்குடாநாட்டின் வறுமை தணிப்பில் நுண்நிதிச் செயற்பாடுகளில் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு பங்குபற்றி ஆய்வு செய்வதாகும்.

சிறப்பு நோக்கங்களாக :

1) நுண்நிதி நிறுவனங்களை இனங்காணுதல், நுண்நிதி நிறுவனங்கள் நிதிவழங்கலில் கையாளும் பல்வேறுமுறைகள், வரையறைகளைக் கண்டறிதல் நுண்நிதி நிறுவனங்க;டாக மக்களுக்கான தொழில்

முயற்சிகளையும், முயற்சியாளர்களையும் இனங்காணுதல்.

2) நுண்நிதி மூலம். தொழில் முயற்சியாளர்களது உற்பத்தி, உற்பத்திதிறன், சந்தைப்படுத்தல், போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிதல். முற்றும் மேற்கூறப்பட்டவற்றில் ஏற்பட்ட மாற்றங்களினூடாக வருமானம், சேமிப்பு வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிதல்.

3) நுண்நிதி நிறுவனங்களும், முயற்சியாளர்களும் நுண்நிதி வழங்குவதிலும், பெறுவதிலும் எதிர்கொள்ளும் சவால்களையும், அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதும் ஆகும்.

ஆய்வு முறையியல்

ஆய்வுப்பிரதேசத்தில் நுண்நிதி வழங்குவதனூடாக எவ்வாறு வறுமை தணிக்கப்படுகின்றது என்பதனை அறியமுடியும். இவ்வாய்வு முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்பவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் செயற்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட நுண்நிதி நிறுவனங்கள் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நுண்நிதி நிறுவனங்களின் பயன்பெறுகின்ற பயனாளிகளும் வீதாசாரரீதியில் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கி தரவுகள் சேகரிக்கப்பட்டது. இவற்றைவிட நுண்நிதி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் வருடாந்த அறிக்கைகள், காலாண்டு இதழ்கள், புள்ளிவிபர அறிக்கைகள், கைநூல்கள் என்பவற்றினூடாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரணரீதியாக ஆய்வு செய்யப்படுகின்றது. பெறப்பட்ட தரவுகள், தகவல்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தி ஆய்வின் நோக்கம், உள்ளடக்கம் என்பவற்றுக்குப் பொருத்தமான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வரைபடங்களினூடாக விளக்கப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய வங்கி ஆண்டறிக்கை, பொருளியல் நோக்கு சஞ்சிகை குறிப்பேடு போன்றவற்றின் வாயிலாகவும் இரண்டாம்நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டு தரவுப்பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## ஆய்வு தொடர்பான இலக்கிய மீளாய்வு

1. Mark paetkau (1999) Financial Support for Micro and small Enterprise in Thailand. i3.dowww.iloorg/public/Englishemployment/papers/thac

இவ் ஆய்வானது IIO/UNDP ஆதரவின் கீழ் நுண்பாக சிறிய தொழில் முயற்சி அபிவிருத்தியும் வறுமை ஒழிப்பும் (Micro and small enterprise development & poverty alleviation in Thailand) என்னும் தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆறு அறிக்கைகளில் 4வது பகுதியாகும். 4 ஆவது பகுதி தாய்லாந்தின் நுண்பாக சிறிய தொழில் முயற்சிகளுக்கான நிதிப்படுத்தல் என்னும் விடயம் பற்றிக் கூறுகின்றது. இந்த ஆய்வு நான்கு அத்தியாயங்களாகப்

பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி அறிமுகமாகவும் இரண்டாவது பகுதி நிதி வழங்கும் மூலங்கள் மூன்றாவது பகுதி தாய்லாந்தின் அனுபவத்தை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டும் விளக்கப்படுகின்றது. நான்காவது பகுதியில் ஆய்வு தொடர்பான சிபார்சுகளும் இடம்பெறுகின்றது.

2. Damian van stauffenbery (2001) How micro finance Envolves : What Bolivia can Envolves : What Bolivia can teach us. Vol – 4 Micro Enterprise development Inter American Development bank PP 1 – 7.

இக்கட்டுரையானது நுண்நிதியானது பொலிவியாவில் 1999 இல் ஏற்பட்ட பொருளாதார மந்தம், கடன் பெறுவோரினால் விடுக்கப்பட்ட சவால்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது. என்பது பற்றியும் முறைசார்ந்த வங்கி துறையிடமிருந்து எவ்வாறு தன்னைக் காப்பாற்றிக் கொண்டது என்பது பற்றியும், இவ்வாயு அழுத்தங்களின் மத்தியில் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பது பற்றியும் கூறப்படுகின்றது. இவற்றைவிட 1999ல் பொலிவியாவில் ஏற்பட்ட கடன் பெறுவோர் புரட்சி பற்றியும் நுண்நிதி நிறுவனங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்ள் பற்றியும் சுருக்கமான மறையில் விலக்கப்பட்டுள்ளது.

3. Achla savyasaachi (1998) sustainable live hoods and Micro enterprise. www.dainet.org/liveoods/11985htm.

இக்கட்டுரை சிறிய தொழில் முயற்சியின் (Micro enterprise) இந்திய அனுபவம் தொடர்பாக விலக்கப்படுகின்றது. இந்தியாவில் ஏறக்குறைய 80% மானவர்கள் வறுமையில் உள்ளனர். இவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அவசியமான வழிவகைகளை இனம் காணவேண்டியது அவசியம். இந்நிலையில் முறை சார்ந்த துறையினரும் அரசாங்கமும் முழுத்தொழிலாளரையும் தமது துறைக்குள் உள்வாங்க் முடியாது. இந்நிலையில் முறைசாராத்துறைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடச் செய்யும் போது இம்முயற்சிக்கு நிதிவளம் பிரச்சனையாக உள்ளது. இந்நிலையில் இவ் வறிய முயற்சியாளருக்கு உதவும் நோக்குடன் UNDP MdJ World business council for sustainable enterprise and Eco friendlytechnology உடன் இணைந்து நடைபெற்ற ஆய்வுப்பட்டறை நிறுவன ரீதியான பொறிமுறை (Institutional mechanism) எவ்வகையில் சிறிய தொழில் முயற்சியாளருக்கு உதவுகிறது என்பதை ஆய்வு செய்துள்ளது.

4. Report of the secretary – General (2000). Role of micro credit in the Eradication of poverty. www.grameeninfo.org/mcredit/unrepor t.htm.

இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையின் 52/194 இலக்கத் தீர்மானத்தின் வேண்டுகோளுக்கிணங்க தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கையானது அனுபவங்களை ஆய்வு செய்து சிறிய தொழில் முயற்சிக் கடனுக்கான அணுகுமுறை. நிர்வாகப்பிரச்சினைகள், வறியவர்களுக்கான ஏனைய

சேவைகளுடன், வரையறுக்கப்பட்ட தொடர்பு, முதலியவற்றின் பலங்களையும், பலவீனங்களையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகளின் ஒழுங்கு முறை மற்றும் சிறுதொழில் கடனுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் ஆதரவு குறிப்பிடப்படுவதுடன் உலக வங்கியின் ஆலோசனைக் குழுவின் வறியவர்களுக்கான உதவி பற்றியும் விசேட கவனம் செலுத்தி ஆராயப்பட்டுள்ளது.

5. Marguerite,S. Robinson (2001) The micro finance Revolution. Sustainable finance for the poor.
   pub : The world bank washingon U.S.A

இவ் ஆய்வு உலகிலுள்ள இலட்சக்கணக்கான வறிய குடும்பங்களுக்கு நிரந்தரமான நிதிச் சேவைகளை வழங்குவதற்கு வழி காட்டுகின்றது. நுண்நிதி(Micro finance) எவ்வாறு எழுந்தது. எவ்வாறு செயற்படுகின்றது? அதன் முக்கியத்துவம் என்ன? போன்ற கேள்விகளுக்கு பூரண விளக்கத்தை அளிக்கின்றது. இதைவிட உலகளாவிய ரீதியில் நுண்நிதியின் தேவையை எவ்வாறு பூர்த்தி செய்ய முடியும் என்பதை மையப்படத்திக் காட்டுகின்றது. நிறுவனங்களின் பங்களிப்பு, வறியவர்களின் நிதி அபிவிருத்திக்கு வழிகாட்டியவர்களின் பங்களிப்பு என்பதுடன் நுண்நிதிப்புரட்சி என்ன அடிப்படைக் கொள்கைகளைத் தழுவியுள்ளது என்பதைப் பகுப்பாய்வு செய்து ஆவணப்படுத்தியுள்ளது. இதில் முக்கியமான விடயம், வறுமைக்குறைப்பு, மனித உரிமை என்பன பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

## தரவுப் பகுப்பாய்வு


இந்த ஆய்வில் பெறப்பட்ட தரவுகள் அவதானிப்புக்கள் பகுப்பாய்வுகளின் முடிவுகளின் படி யாழ்மாவட்டத்தில் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்களின் கடன் வழங்கலில் நுண்நிதி முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இக்கூட்டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்களின் சேமிப்பில் இருந்து கூடுதலான கடன்கள் வழங்கப்படுகிறது. ஆரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியும் பயன்படுத்தப்படுகின்றது. சில சமயங்களில் வங்கிகளில் கடன் பெற்று அல்லது சங்கங்கள் சேர்ந்த சமாசங்களின் மூலம் நிதியினைப் பெற்றும் கடன் வழங்குவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

அட்டவணை :1 யாழ்மாவட்டத்தில் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்களால் வழங்கப்பட்ட கடன்கள் (31.12.2012) (பெறுமதி 100,000/, இல்)

| | நோக்கம் | தொகை |
|---|---|---|
| 1 | விவசாயம் | 196.66 |
| 2 | மீன்பிடி | 26.29 |
| 3 | கைத்தொழில் | 202.74 |
| 4 | சுயதொழில் | 207.55 |
| 5 | ஏனையவை | 33.14 |
| | மொத்தம் | 666.38 |

மூலம்: கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

பொதுவாக இச்சங்கங்கள் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டது போல விவசாயம் கால்நடை வளர்ப்புஇ மீன்பிடிஇ கைத்தொழில்இ சுயதொழில் ஏனையவை என்பதன் அடிப்படையில் நுண்நிதி வழங்கப்படுகின்றது 2012ஆம் ஆண்டில் இக்கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மொத்தமாக வழங்கப்பட்ட நுண்நிதியின் விபரம் கீழே வரைபடம் மூலம் விளக்கப்படுகிறது.




மேற்காட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சிக்கன்கடனுதவி கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் வழங்கப்பட்ட கடன்களில் சுயதொழிலுக்கான கடன்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மீன்பிடிக்கு குறைந்தளவு கடன்கள் வழங்கப்படுகின்றன. இங்கு வழங்கப்படுகின்ற கடன்களில் ஆகக்கூடுதலான தொகையாக 200000/- காணப்படுகிறது. இருவருடங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் 12% வட்டி அறவிடப்படுகின்றது.

இவ்வகையில் முயற்சியாளர்களுக்கு இந்நுண்நிதி மூலமான கடன் வழங்கலின் மூலம் உற்பத்தி சந்தைப்படுத்தலில் சாதகமான தன்மைகள் ஏற்படுத்தப்படுகின்ற போதும் வருமானம் சேமிப்பு என்பவற்றில். பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. இதன் காரணமாக அவர்களது வாழ்க்கைத் தரத்திலும் சிறியளவு மாற்றமே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைக்குப் பல்வேறு காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன வழங்கப்படுகின்ற கடன்கள் இவர்களின் உற்பத்திச் செயன்முறைகளுக்குப் போதுமானதாக அமையவில்லை. ஏன்பது முக்கியமான பிரச்சனையாகும். இதனைவிட கடன்கள் வழங்கப்படுவதோடு மட்டுமல்லது பயனாளிகளுக்கு தொழில் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவதும் இன்றியமையாதகும் அத்துடன் வழங்கப்பட்ட கடன்கள் உரியமுறையல் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மேற்பார்வை செய்ய வேண்டியது மிகமுக்கியமானதாகும். வழங்கப்படும் கடன்கள் குறுங்காலக் கடன்களாகக் காணப்படுகின்றன அதாவது இரண்டு வருடங்கள் மீளச் செலுத்தும் காலமாகக் காணப்படுகின்றது. எனவே வழங்கப்படும் கடன்கள் நடுத்தரகால அல்லது நீண்டகாலக்கடன்களாக மாற்றப்படுதல் சிறப்பானதாகும்.

இவ்விடயங்கள் இடம் பொறாத விடத்து உற்பத்தி வருமானம் கடன் மீளச் செலுத்துதல் என்பன பாதிக்கப்படும். போது அவர்களின் வாழ்க்கைத் தரத்திலும் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் மக்களின் வறுமை என்பதும் குறைவடைவதற்கு வாய்ப்பு ஏற்படாது.

அட்டவணை 2 : நிறுவனரீதியாக சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்களால் வழங்கப்பட்ட கடன்கள் (31.12.2012) )
(பெறுமதி 100,000/, இல்)

| | ஆண்டு | தொகை |
|---|---|---|
| 1 | 2009 | 656.67 |
| 2 | 2010 | 659.56 |
| 3 | 2012 | 666.38 |

மூலம்: கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

இவற்றை விட சில தொழில் நடவடிக்கைகள் காலநிலையை நம்பியே மேற்கொள்ளப்படுகின்றன காலநிலை பொய்க்கும் பட்சத்தில் உற்பத்தி பாதிக்கப்பட்டு வருமானம் பாதிக்கப்படும் போது பெற்றகடனை உரியகாலத்தில் மீளச் செலுத்தமுடிவதில்லை. அத்துடன் அரசினால் பயிரழிவு தொழில்முயற்சி பாதிப்படைதல் போன்றவற்றுக்கு நிவாரணங்கள் எதுவும்

வழங்கப்படுவதும்மில்லை இவ்வாறான நிலைமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மீளச் செலுத்தும் காலப்பகுதியைக் கூட்டலாம் அல்லது சிலசலுகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணலாம்.

## முடிவுரை

நுண்நிதி வளர்ச்சியடைவதன் மூலம் வறுமைக்குறைப்பு வேலைவாய்ப்பு அதிகரிப்பு வாழ்க்கைத்தர உயர்வு ஏற்படுவதுடன் மொத்தத்தேசிய உற்பத்தியை அதிகரித்துப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யமுடியும். இவ்வாய்வானது யாழ்குடாநாட்டின் வறுமை தணிப்பில் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கங்களில் நுண்நிதியின் பங்களிப்புப் பற்றி ஆய்வு செய்வதாக அமைகின்றது யாழ்குடாநாட்டில் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கங்கள் நுண்நிதி வழங்கலில் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றன. அதேநேரம் இந்நுண்நிதி வழங்கலில் இந்நிறுவனமும் பயனாளிகளும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர் இங்கு இந்நிறுவனம் மக்களோடு மக்களாக செயற்பட்டு வழிகாட்ட வேண்டியது அவசியமாகும் வழங்கப்படும் நிதி மீளச்செலுத்தும் காலம் அதிகரிக்கப்படவேண்டும் பயிற்சிகள் ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும். தொழில்கள் மேற்பார்வை செய்யப்பட வேண்டும் இதன் மூலம் உற்பத்தி அதிகரிப்பிற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதேபோல் பயனாளிகளும் தாம் பெற்றுக்கொண்ட நுண்நிதியினை உரிய முறையயில் பயன்படுத்தி உரியகாலத்தில் மீளச் செலுத்துவதன் மூலம் உற்பத்தியையும் வருமானத்தையும் அதிகரித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வதன்மூலம் வறுமையை குறைந்துக்கொள்ள முடியும்.

## உசாத்துணை :-


1. Mark paetkau (1999) Financial Support for Micro and small Enterprise in Thailand.
   i3.dowww.iloorg/public/Englishemployment/papers/thac
2. Damian van stauffenbery (2001) How micro finance Envolves : What Bolivia can Envolves : What Bolivia can teach us. Vol – 4 Micro Enterprise development Inter American Development bank PP 1 – 7.
3. Achla savyasaachi (1998) sustainable live hoods and Micro enterprise.
   www.dainet.org/liveoods/11985htm.
4. Report of the secretary – General (2000). Role of micro credit in the Eradication of poverty.
   www.grameeninfo.org/mcredit/unreport.htm.
5. Marguerite,S. Robinson (2001) The micro finance Revolution. Sustainable finance for the poor. pub : The world bank Washington U.S.A